பேரூராட்சி அலுவலகம்,
ஆசாரிபள்ளம்,
கன்னியாகுமரி மாவட்டம்.

ந.க.எண். 29/2010/அ1 நாள் : 09.06.2010

**அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011**

**ஒப்புநோக்கு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு**

1. கன்னியாகுமரி மாவட்டம் ஆசாரிபள்ளம் பேரூராட்சியில் அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–2011–ன் கீழ் அட்டவணையின்படி உள்ள பணிகளை செய்வதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன. ஒப்பந்தப்புள்ளிகள் தகுதியான ஒப்பந்தகாரர்களிடமிருந்து பகிரங்கமாக பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தக்காரர்கள் **மத்திய அல்லது மாநில அரசு அல்லது மத்திய அரசு மாநில அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும்.** மேலும் ஒப்பந்தக்காரர்கள் குறைந்தபட்ச தகுதியுடைய **வகுப்பு 3 மற்றும் 4–ல்** தெரிவிக்கப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் பணிகள் வழங்கப்படும் (15 லட்சம் முதல் 30 லட்சம் மதிப்பீடு வேலைகளுக்கு வகுப்பு 3– வது நிலையும் 15 லட்சம் வரையுள்ள வேலைகளுக்கு வகுப்பு 4–வது நிலை ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து ஒப்பந்தங்கள் பெறப்படும்.

2. ஆசாரிபள்ளம் பேரூராட்சியில் கழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்தப்புள்ளிகள் இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் கீழ்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு வரவேற்கப்படுகின்றன.

3. பணிகளுக்குரிய ஒப்பந்த படிவங்களை (நமுனா படிவம்) 09.06.2010 முதல் 24.06.2010 வரை உள்ள வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் உரிய தொகையினை ஆசாரிபள்ளம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி அல்லது செயல் அலுவலர் ஆசாரிபள்ளம் பேரூராட்சி என்ற முகவரிக்கு வங்கி வரைவோலை அனுப்பி பெற்றுக் கொள்ளலாம். ஒப்பந்தப் படிவங்களை பதிவு தபால் மூலமாகவோ அல்லது விரைவு தபால் மூலமாகவோ பெற விரும்புவோர் உரிய தொகைக்கு மேல் கூடுதலாக ரூ.200/– செலுத்த வேண்டும். **தபால் வழி தாமதங்களுக்கு ஆசாரிபள்ளம் பேரூராட்சி செயல் அலுவலர் பொறுப்பேற்க இயலாது.**

4. ஒவ்வொரு பணிகளுக்கும் அதன் எதிரே குறிப்பிட்டுள்ள **டேவணித் தொகையை ரொக்கமாகவோ அல்லது வரைவோலையாகவோ செயல் அலுவலர் ஆசாரிபள்ளம் பேரூராட்சி என்ற முகவரிக்கு செலுத்தப்பட வேண்டும்.**

5. ஒப்பந்தப்புள்ளிகளை ஆசாரிபள்ளம் பேரூராட்சி செயல் அலுவலராலோ அல்லது அவரது அதிகாரம் பெற்றவராலோ **25.06.2010 வெள்ளிக்கிழமை 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை ஆசாரிபள்ளம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்ற அலுவலரால் வருகை தந்துள்ள ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் **அன்றைய தினம் 3.30 மணிக்கு** திறக்கப்படும் ஒப்பந்தப்பள்ளி பெறப்படும் நாள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டால் அதற்கு அடுத்த வேலை நாளில் அதே நேரத்தில் ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு அன்றைய தினம் திறக்கப்படும்.

6. திட்டப்பணிகளுக்கான சம்மந்தப்பட்ட பணி ஆரம்பிக்கும் இடத்தில் **தகவல் பலகை நிறுவப்பட வேண்டும்.** திட்டப்பணி ஆரம்பிப்பதற்கு முன், நடைபெறும் போது மற்றும் முடிவுற்றவுடன் ஆகிய **மூன்று நிலைகளிலும் புகைப்படம் எடுத்து சமர்ப்பிக்க வேண்டும்.**

7. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி படிவத்தில் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

| வ. எண் | திட்டம் மற்றும் வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. இலட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்த நமுனா ( விற்பனை வரி மற்றும் சர்சார்ஜ் உட்பட) ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | **2010–2011 அனைத்து பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தில்**<br><br>ஆசாரிபள்ளம் பேரூராட்சிக்குட்பட்ட ஞானம் காலனி – கோணம் குருகுலம் சாலை மேம்பாடு செய்து, மழைநீர் கால்வாய், சிறுபாலம் அமைத்து CFL தெருவிளக்கு அமைத்தல். | 12.00 | 12000 | 3360 | 3 மாதங்கள் |
| 2 | ஆசாரிபள்ளம் பேரூராட்சிக்குட்பட்ட தாமரைக்குளத்தில் தூர் வாரி கரையை பலப்படுத்தி படித்துறை மற்றும் Ramp அமைத்தல். | 5.00 | 5000 | 1680 | 3 மாதங்கள் |
| 3 | ஆசாரிபள்ளம் பேரூராட்சிக்குட்பட்ட கீழ்காணும் சாலைகளை சிமிண்ட் சாலைகளாக அமைத்தல்.<br>(1) கார்த்திகைவடலி சின்னக்குளம் சாலையில் லிங்கம் வீடு முதல் குமார் வீடு வரை சிமிண்ட் தளம் அமைத்தல்.<br>(2) தம்மத்துக்கோணத்தில் ஹரி ஆஸ்பத்திரி சாலை சிமிண்ட் தளம் அமைத்தல் .<br>(3) கார்த்திகைவடலியில் பஞ்சுபழம் வீட்டுக்கு எதிர்புறம் உள்ள சாலை சிமிண்ட் தளம் அமைத்தல். | 8.50 | 8500 | 3360 | 2 மாதங்கள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 4 | ஆசாரிபள்ளம் பேரூராட்சிக்குட்பட்ட கீழ் காணும் பகுதிகளில் மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.<br>(1) பள்ளவிளையில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல்.<br>(2) ஞானம் காலனியில் 1 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி அமைத்தல். | 8.50<br>7.50 | 8500<br>7500 | 3360<br>3360 | 3 மாதங்கள்<br>3 மாதங்கள் |
| 5 | ஆசாரிபள்ளம் சொந்தமான கீழ் காணும் குடிநீர் திட்டங்களுக்கு கூடுதலாக ஒரு ஆழ் குழாய் கிணறு அமைத்தல்.<br>(1) பள்ளவிளை,<br>(2) அனந்தன் நகர்,<br>(3) கீழ ஆசாரிபள்ளம்,<br>(4) தம்மத்துக்கோணம்,<br>(5) எறும்புக்காடு,<br>(6) தாராவிளை,<br>(7) சார்லஸ் புரம்,<br>(8) மறுகால்தலைவிளை,<br>(9) பூச்சிவிளாகம்,<br>(10) பூவன்குடியிருப்பு. | 15.00 | 15000 | 3360 | 3 மாதங்கள் |
| 6 | ஆசாரிபள்ளம் பேரூராட்சி அலுவலகத்தில் முதல் தளம் மற்றும் மன்ற கூட்ட அரங்கம் கட்டுதல். | 10.00 | 10000 | 3360 | 3 மாதங்கள் |

## <u>சிறப்பு நிபந்தனைகள்</u>

1. ஒப்பந்தப்புள்ளிகள் கொடுப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் அவர்களின் பெயரில் கட்டாயமாக கடந்த ஐந்து ஆண்டுகளில் அரசு துறையில் **2005–2006 முதல் 2009–2010** வரை குறைந்த பட்சம் இரண்டு நிதி ஆண்டுகளில் வருடாந்திர நிதி செயல் திறன் தற்போது கேட்கப்படும் ஒப்பந்த புள்ளிகளில் மதிப்பீட்டிற்கு இரண்டரை மடங்கு அளவிற்கு கூடுதலாக கட்டுமான பொறியியல் பணிகள் செய்திருக்கப்பட வேண்டும்.

2. மேற்கண்ட பணிகளுக்கு தேவைப்படும் அனைத்து பொருள்களையும் ஒப்பந்தக்காரர்கள் தங்களது சொந்த பொறுப்பில் தரமானதாக வாங்கி பயன்படுத்தல் வேண்டும். அவ்வாறு வாங்கப்படும் பொருட்கள் தரம் மற்றும் அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவுகோலுக்கு

உட்பட்டிருத்தல் வேண்டும். தரத்தைக் குறித்த தேவையான சான்று சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. ஒப்பந்தக்காரர்கள் கடந்த 5 ஆண்டுகளில் செய்து முடித்த பணி விவரங்களை ஆண்டு வாரியாக தாக்கல் செய்ய வேண்டும்.

4. அமைக்கப்படும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் பணியினை முடிக்கும் நாளிலிருந்து **ஒரு வருடம் முடியும் வரையில் ஏற்படும் அனைத்து பராமரிப்பு பணிகளையும் தன் சொந்த செலவிலேயே மேற்கொள்ளுதல் வேண்டும்.** கூடுதல் வைப்புத் தொகை மேற்படி மதிப்பீட்டில் 5% செலுத்தப்பட வேண்டும்.

5. இதர விவரங்களை ஒப்பந்தப்புள்ளி நமுனாவிலிருந்து தெரிந்து கொள்ளலாம் அல்லது அலுவலக நேரங்களில் பேரூராட்சி பொறியாளரின் ஆலோசனைகளைப் பெறலாம்.

6. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு மன்ற ஒப்புதல் பெற்ற பின்னரே வேலை உத்தரவு ஆணை வழங்கப்படும்.

7. மேற்கண்ட பணிகள் நடைபெறும் போது சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களால் ஆய்வு செய்யப்படும்.

8. பணிகள் நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடிக்கப்பட வேண்டும் தவறும் பட்சத்தில் விதிமுறைகளுக்குட்பட்டு அபராத தொகை விதிக்கப்படும்.

**செயல் அலுவலர்**
**ஆசாரிபள்ளம் பேரூராட்சி**
**கன்னியாகுமரி மாவட்டம்**

**பெறுநர்:**

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள்,
ஆசாரிபள்ளம் பேரூராட்சி.
**(அஞ்சலிட்ட சான்று மூலம்)**

**நகல்:—**

1. மாவட்ட ஆட்சித்தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள், நாகர்கோவில்
4. தொகுதி இளநிலைப் பொறியாளர், ஆசாரிபள்ளம் பேருராட்சி
5. பேரூராட்சி செயல் அலுவலர்கள், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பேரூராட்சிகள் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
6. ஆணையாளர், இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம் (விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய)
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
8. சம்பந்தப்பட்ட இணையதளங்களுக்கு
9. தலைவர் அவர்கள் மேஜைக்கு தகவலுக்காக.

**Visit us http://www.tenders.tn.gov.in மற்றும் http://townpanchayats.tn.gov.in/tender**